மக்கள் குரல்
நடுநிலை நாளேடு

# வழமையான நிலையிலிருந்து சுழற்சிப் பொருளாதாரத்துக்கு மாறும் மனிதவளம்

சென்னை, மே 23–

**சுழற்சி பொருளாதாரத்துக்கு மாறிவரும் மனிதவள ஆற்றல்களை புரிந்து கொண்டு, மனித வள மேலாளர்கள் செயல்பட வேண்டும் என, ஸ்டெல்லா மேரீஸ் ஒரு நாள் கருத்தரங்கில் மக்கள் குரல் ஆசிரியர் முத்துக்குமார், காக்னிசென்ட் நிறுவன தலைமை செயல் அலுவலர் ராஜஸ்ரீ நடராஜன் ஆகியோர் கூறினர்.**



சென்னை ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரி மற்றும் பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் "வழமையான நிலையிலிருந்து சுழற்சிப் பொருளாதாரத்துக்கு மாறும் மனிதவளம்" என்ற தலைப்பிலான ஒரு நாள் சர்வதேச கருத்தரங்கம் இன்று காலை, ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரி அரங்கில் தொடங்கியது. இந்த கருத்தரங்கில் ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரி முதல்வர் டாக்டர் ரோஸி ஜோசப் வரவேற்று பேசினார்.

பாட்டம் லைன் சர்வீசஸ் சொல்யூசன்ஸ் நிறுவனத்தின் நிறுவனர் பி.ஆர். பாலாஜி துவக்க உரை ஆற்றினார். மனிதவள மேலாண்மை நிர்வாகிகள் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறைகள் குறித்து பேசும்போது, தகவல் தொடர்பு மற்றும் புரிதல், நம் இலக்கு நோக்கிய பயணத்தில் உரிய நேரத்தில் தேவையான மாற்றங்களை செய்தல் ஆகியவற்றுடன் "எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற திருவள்ளுவரின் பொய்யாமொழிக்கு இணங்க, மாற்றங்களை உரிய முறையில் கைக்கொள்ள வேண்டும் என்றார்.

## மாறும் தொழில்நுட்பம்

கருத்தரங்க நிகழ்ச்சியில் தலைமை தாங்கிய மக்கள் குரல் மற்றும் டிரினிட்டி மிரர் நாளிதழ்களின் ஆசிரியர் ஆர். முத்துக்குமார் பேசியதாவது:–

உலகின் மிகப்பெரிய டிஜிட்டல் பொருளாதாரமாக இந்தியா வேகமாக வளர்ந்து வருகிறது. இந்தியாவில் 60 கோடிக்கும் அதிகமான இணைய சந்தாதாரர்கள் உள்ளனர். சீனாவை விடவும் இந்திய மொபைல் டேட்டா பயனர்கள் அதிகமாக உள்ளனர். பொதுத்துறை மற்றும் தனியார் துறைகள் டிஜிட்டல் பயன்பாட்டை அதிகரித்துள்ளன. இந்திய அரசின் பயோமெட்ரிக் டிஜிட்டல் அடையாள திட்டமான ஆதாரில் 120 கோடிக்கும் அதிகமானவர்களை பதிவு செய்துள்ளது. 1 கோடிக்கும் அதிகமான வணிகங்களை சரக்கு மற்றும் சேவை வரி டிஜிட்டல் தளத்திற்கு கொண்டு வந்துள்ளது.

இந்தியாவில் இன்னும் ஓராண்டில் 70 கோடி பேர் ஸ்மார்ட் போன் எனப்படும் சீர்மிகு செல்பேசிகளை பயன்படுத்துவோராக மாற உள்ளனர். சுகாதாரம் மற்றும் விவசாயம் உட்பட பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறையும் டிஜிட்டல் மயமாக்கப்பட்டு வருகிறது. இது சுழற்சி பொருளாதாரத்தின் இன்றியமையாத பகுதியாகும். இதன் மூலம் 7 கோடி புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும். மேலும் 4 கோடி பேர் மீண்டும் பணியமர்த்தப்பட வேண்டும். தேவை, இயற்கையோடு இயைந்து வாழ்வதற்கான புதிய பார்வையும் அதனை ஊக்குவிக்கக்கூடிய ஒரு புத்திசாலித்தனமான தலைமையும் எனலாம்.

## டிஜிட்டல் நகரம்

தென் கொரியா இப்போது உலகின் 11 வது பெரிய பொருளாதாரமாக உள்ளது. சியோலுக்குச் செல்லும் மக்கள் அங்குள்ள சூழ்நிலையால் ஈர்க்கப்படுவார்கள். சாலையில் நடப்பது அல்லது பயணம் செய்வது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. ஏனென்றால் சிறிய குன்றுகள், அல்லது மலைகள் மற்றும் ஹான் நதி ஒன்றுடன் ஒன்று குறுக்கே செல்லும். ஹான் ஆற்றின் கரையில், நகரம் முழுவதும் பசுமையான பூங்காக்களுக்கு மாறாக உயரமான கட்டிடங்களுடன் கட்டப்பட்டுள்ளது.

சில கிலோமீட்டர் தொலைவில், புறநகரில், ஒரு நவீன நகரம் உருவாக்கப்பட்டுள்ளது. இது டிஜிட்டல் மீடியா நகரம்;

நவீன ஊடகங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப மையங்கள் அனைத்தும் இங்கு உள்ளன. இது டிஜிட்டல் தொழில்நுட்பங்கள், வீடுகள் எங்கும் நெட்வொர்க் அலுவலகங்கள், அடுக்கு மாடி குடியிருப்புகள், கண்காட்சிகள், மாநாட்டு அரங்குகளுக்கான உயர் தொழில்நுட்ப வளாகமாகும். உயர் தொழில்நுட்ப நகரம் ஒலிபரப்பு, திரைப்படங்கள், விளையாட்டுகள், இசை, மின் கற்றல் மற்றும் தொடர்புடைய தொழில்களுக்காக டிஜிட்டல் மீடியா தெருவை மையமாகக் கொண்டுள்ளது.

1978 முதல் 1993 வரை, டிஜிட்டல் மீடியா சிட்டியின் தற்போது வளர்ச்சியடைந்த பகுதி உண்மையில் சியோலின் குப்பை கொட்டும் ஒரு பெரிய நிலப்பரப்பாக இருந்தது என்பதுதான் சுவாரசியம். ஒரு காலத்தில் அழுகிய குப்பைகள் இருந்த இடம் இந்த டிஜிட்டல் நகரத்தின் கீழ் சமன் செய்யப்பட்டுள்ளன. அழுகும் குப்பை மீத்தேன் உற்பத்தி செய்கிறது. இது சமையல் மற்றும் மின் உற்பத்திக்கான எரிபொருளாக பயன்படுத்தப்படுகிறது.

## வளங்களாகும் குப்பை மேடுகள்

சென்னை போன்ற நகரங்கள் அல்லது இந்தியாவின் பிற நகரங்கள் மாற்றியமைக்கக்கூடிய மிகவும் ஊக்கமளிக்கும் கண்டுபிடிப்பு. சென்னையிலுள்ள பள்ளிக்கரணை குப்பைக் கிடங்கில் இருந்து மின்உற்பத்தி, சமையல் கேஸ் உற்பத்திக்கான திட்டங்கள் வகுக்கப்படுவதாக அண்மையில் தமிழ்நாடு அரசு அறிவித்து ஆய்வு செய்தது குறிப்பிடத்தக்கது. கொள்கை வகுப்பாளர்கள், அதிகாரிகள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டாளர்கள் குப்பைகளை நன்மையான நோக்கங்களுக்காகப் பயன்படுத்த வேண்டும்.

2050 ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த மக்கள் தொகை 170 கோடியை தொடும் என்று கணிக்கப்பட்டுள்ளது. உலகின் அனைத்துப் பொருளாதாரத்தையும் இந்தியா விஞ்சும் என்றும், சீனாவுக்கு அடுத்தபடியாக நாம் சிறந்து விளங்குவோம் என்றும்v கணிப்புகள் காட்டினாலும், ஒட்டுமொத்த இந்திய மக்கள் மகிழ்ச்சியாக இருப்பார்களா?

சீனாவைப் பொறுத்தவரை அனைத்திலும் ஒரு மாற்றத்தை மறுசுழற்சி அம்சத்தை நடைமுறைப்படுத்துகிறார்கள்.

மாசுபடுத்தும் வாகனங்களின் உற்பத்தியை நிறுத்தி, பிரச்சனையைக் குறைக்க மாற்று வழிகளைக் கொண்டு வருகிறார்கள். இரு சக்கர வாகனங்கள் தயாரிப்பதற்கு தடை இல்லை என்றாலும் சுற்றுச்சூழலுக்கு உகந்த இரு சக்கர வாகனங்களை தயாரிப்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதன் வளர்ந்து வரும் மக்கள்தொகையைக் கருத்தில் கொண்டு, குடிமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய தகுந்த வசதிகளை வழங்குவதற்கு சீனா முயற்சிக்கிறது. சீனா கார்களை மலிவாக செய்துள்ளது. மேலும் போதுமான பார்க்கிங் இடம் இருப்பதை உறுதி செய்வதற்காக, நகரங்கள் கிடைமட்டமாகவும் செங்குத்தாகவும் விரிவடைந்து வருகிறது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றார்.

## வாய்ப்புகளை உற்றுநோக்குங்கள்

நிகழ்ச்சியில், காக்னிசென்ட் நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் ராஜஸ்ரீ நடராஜன் பேசுகையில், பெருந்தொற்று காலம் மனித இனத்திற்கு பல்வேறு துன்பங்களை கொடுத்திருந்தாலும் புதிய வாய்ப்புகளையும் காட்டியது என்றே சொல்ல வேண்டும். இதனை மனித வள மேலாளர்கள் கவனிக்க வேண்டும். முன்பு வழமையான முறையில் தங்கள் ஊழியர்களுக்கான பயிற்சிகளை வழங்கி வந்தார்கள். இப்போது இணைய வழியிலான மெய்நிகர் காட்சி வழியாக ஆலோசனை கூட்டங்கள், ஊக்குவிப்பு கருத்தரங்குகள் நடத்தப்படுகிறது.

பல பணியார்கள் வேலை வாயப்பை இழந்திருக்கும் நேரத்தில் வீட்டிலிருந்தே பணி செய்யும் சூழல் அதிகரித்துள்ளது என்பதையும் மறந்து விட முடியாது. சின்னச் சின்ன ஊர்ப்புறங்களில் இருந்தும் கூட இப்போது பணி செய்யும் சூழல் வளர்ந்துள்ளது. இதுபோன்ற மாற்றங்களை, இடர்களில் இருந்தும் வாய்ப்புகளை பார்க்க வேண்டும். இதனை மனிதவள மேலாண்மை நிர்வாகிகள் கண்டுணர்ந்து பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.



Extract from the newspaper:

**Makkal Kural (e-paper)**
Date: 23 May 2022
Page: 7

